செய்தி வெளியீடு எண். 80 நாள்: 03.02.2023

# திருவள்ளூர் மாவட்டம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மகளிர் திட்டம், மாவட்ட இயக்க மேலாண்மை அலகில் பூந்தமல்லி ஒன்றியத்தில் காலியாக உள்ள ஒரு வட்டார இயக்க மேலாளர் மற்றும் திருத்தணி ஊராட்சி ஒன்றியத்தில் 1 வட்டார ஒருங்கிணைப்பாளர் பணியிடங்களுக்கு தகுதியின் அடிப்படையில் பெண் விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன – மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கீஸ்,இ.ஆ.ப. அவர்கள் தகவல்

திருவள்ளூர் மாவட்டம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மகளிர் திட்டம், மாவட்ட இயக்க மேலாண்மை அலகில் பூந்தமல்லி ஒன்றியத்தில் காலியாக உள்ள ஒரு வட்டார இயக்க மேலாளர் (BMM) மற்றும் திருத்தணி ஊராட்சி ஒன்றியத்தில் 1 வட்டார ஒருங்கிணைப்பாளர் (BC) பணியிடங்களுக்கு தகுதியின் அடிப்படையில் பெண் விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

## வட்டார இயக்க மேலாளர்கள் (BMM), பூந்தமல்லி ஒன்றியம்

### கல்வித் தகுதிகள் விவரம்

| | | |
|---|---|---|
| 1 | கல்வித் தகுதி | ஏதோவது ஒரு பாடத்தில் பட்டப்படிப்பு படித்திருக்க வேண்டும். இவர்கள் ஆறு மாத காலம் கணினி பயிற்சி (MS Office) பெற்றிருக்க வேண்டும். கணினி அறிவியல் அல்லது கணினி உபயோகம் குறித்த பட்டப்படிப்பு படித்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கலாம். |
| 2 | வயது | 28 வயதிற்குள் பெண் விண்ணப்பதாரராக இருக்க வேண்டும். |
| 3 | முன் அனுபவம் | குறைந்தபட்சம் 3 ஆண்டுகள் மகளிர் மேம்பாடு திட்டம் தொடர்பான பதவிகளில் பணியாற்றி இருக்க வேண்டும். |
| 4 | இருப்பிடம் | திருவள்ளூர் மாவட்டத்தை இருப்பிடமாகக் கொண்டு இருக்க வேண்டும். |

## வட்டார ஒருங்கிணைப்பாளர், திருத்தணி ஒன்றியம்

### கல்வித் தகுதிகள் விவரம்

| | | |
|---|---|---|
| 1 | கல்வித் தகுதி | ஏதோவது ஒரு பாடத்தில் பட்டப்படிப்பு படித்திருக்க வேண்டும். இவர்கள் ஆறு மாத காலம் கணினி பயிற்சி (MS Office) பெற்றிருக்க வேண்டும். |
| 2 | வயது | 28 வயதிற்குள் பெண் விண்ணப்பதாரராக இருக்க வேண்டும். |
| 3 | முன் அனுபவம் | குறைந்தபட்சம் 2 ஆண்டுகள் மகளிர் மேம்பாடு திட்டம் தொடர்பான பதவிகளில் பணியாற்றி இருக்க வேண்டும். |
| 4 | இருப்பிடம் | சம்மந்தப்பட்ட வட்டாரத்தை இருப்பிடமாகக் கொண்டு இருக்க வேண்டும். |

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய கடைசி நாள் :- 08.02.2023.

விண்ணப்பம் பெற வேண்டிய முகவரி – திட்ட இயக்குநர் / இணை இயக்குநர்,<br>தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,<br>மகளிர் திட்டம், திருவள்ளூர் மாவட்டம்.

திருவள்ளூர் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மாவட்ட இயக்க மேலாண்மை அலகில் (மகளிர் திட்டம்) காலியாக உள்ள மேற்குறிப்பிட்ட வட்டார இயக்க மேலாளர்கள் மற்றும் வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் பணியிடங்களுக்கு தகுதியுள்ள பெண் விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்களை **08.02.2023–**க்குள் அனுப்பி பயன்பெறுமாறு திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கீஸ்,இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**